DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180 / 2024**

Prosecution Witness No. PW.12

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **திரு. செந்தில்குமார்** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/ கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 28.07.2026.

(Accused present)

**முதல் விசாரணை** :

நான் தற்பொழுது தஞ்சாவூர் மாவட்டம் நடுக்காவேரி காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.03.2023-ஆம் தேதி திருச்சி மாவட்டம் துறையூர் காவல்நிலையம் ஆய்வாளராக பணிபுரிந்தபோது உதவி ஆய்வாளர் திரு.முத்துசாமி அவர்கள் பதிவு செய்த நிலைய குற்ற எண்.67/2024 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 302, 506(2) இ.த.ச-வின் படியான முதல் தகவல் அறிக்கையினை இரவு 21.00 மணிக்கு எனது விசாரணைக்கு எடுத்து வந்தேன். பின்னர், சம்பவ இடம் சென்று 22.15 மணிக்கு சாட்சிகள் முகமது பரூக், மதுபாலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை தெருவிளக்கு வெளிச்சத்தில் ../

பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.10.** பின்னர், சம்பவ இடத்திலிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் 23.00 மணிக்கு ரத்தம் படிந்த மண் சிறிதளவு, ரத்தம் படியாத மண் சிறிதளவு, ரத்தக்கறை படிந்த பின்பக்க கவருடன் கூடிய OPPO Cellphone ஒன்றையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர், சாட்சிகள் கலைச்செல்வி, சுபாநந்தினி, சரண்யா, நாகலெட்சுமி, முகமது பரூக், மதுபாலன், வினோத்குமார் S/o. வசந்தகுமார், வினோத் S/o. சண்முகம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், பிரதேதத்தை துறையூர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 12.03.2024–ஆம் தேதி காலை 7.00 மணிக்கு துறையூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக வைத்து கொலை செய்யப்பட்டு இறந்துபோன நபரான கிருஷ்ணமூர்த்தி என்பவர் பிரேதத்தை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.11.** பின்னர், மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவலர் 652 தமிழரசன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். பின்னர், சாட்சிகள் ரகு, ரமேஷ்வரன், தனீஷ்குமார், மதன்பாபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வினோத்குமார், வினோத் ஆகியோர்களை விசாரித்து கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், அன்றைய தினம் 13.15 மணிக்கு எதிரி சந்திரசேகரை துறையூர் அரசு மருத்துவமனை பஸ் நிறுத்தத்தில் இருந்து காரணம் கூறி கைது செய்தேன். பின்னர், சாட்சிகள் பாலகுமார், ../

சண்முகம் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால், நான் என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்த இடத்தை அடையாளம் காட்டியும், கொலை செய்ய பயன்படுத்திய கொடுவாளையும், நான் போட்டிருந்த சட்டையையும் மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்வேன் என்று சொன்னதின் அடிப்படையில் எதிரியையும் அதே சாட்சிகளையும் அழைத்துக்கொண்டு பெருமாள்பாளையம் மரியதாஸ் காலிமனையில் உள்ள பாழடைந்த கட்டிடத்தின் சுவற்றின் பின்புறம் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த 1. மஞ்சள் சிகப்பு கலந்த நைலான் கயிறு சுற்றப்பட்ட ரத்தக்கறை படிந்த சுமார் 43 செ.மீ. நீளமுள்ள முன்பக்கம் வளைந்த கொடுவாள் ஒன்று, 2. ரத்தக்கறை படிந்த NXG என்று அச்சிடப்பட்ட வெள்ளை கலந்த சிமெண்ட் நிற அரைக்கை சட்டை ஒன்றையும் 16.00 மணிக்கு மகஜரில் கைப்பற்றினேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.12.** கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.13. ரத்தக்கறை படிந்த NXG என்று அச்சிடப்பட்ட வெள்ளை கலந்த சிமெண்ட் நிற அரைக்கை சட்டை **சா.பொ.ஆ.9.** பின்னர், சாட்சிகள் பாலகுமார், சண்முகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி மற்றும் தடய பொருட்களுடன் நிலையம் வந்து தக்க வழிக்காவல் மூலம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர், பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபொருட்களை காவலர் 652 தமிழரசன் என்பவர் தனி அறிக்கையுடன் ஆஜர் செய்ததை நான் ../

படிவம் 95–இல் கைப்பற்றினேன். பின்னர் 13.03.2024–ஆம் தேதி சாட்சிகள் கலைச்செல்வி, தனீஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். செல்வமணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், 21.03.2024–ஆம் தேதி சாட்சி தமிழரசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர், 30.05.2024–ஆம் தேதி இவ்வழக்கில் பிரேதத்தின் உடல் உறுப்புகளை ஆய்வு செய்த தடய அறிவியல் நிபுணர் அபிராமி என்பவரை விசாரித்தும், வழக்கின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த துறையூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.மோகனா கண்ணா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வளார் திரு.முத்துசாமி அவர்களை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 21.06.2024–ஆம் தேதி சாட்சி ஆனந்தன், எழிலரசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், அன்றைய தினமே வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட உயிரியியல் அறிக்கை **அ.த.சா.ஆ.14.** குருதி வடிநீரியியல் அறிக்கை **அ.த.சா.ஆ.15.** சாட்சி பாலகுமார் என்னிடம் சொன்னதையே வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதன்முதலாக நான் என்ன செய்தேன் என்றால், சம்பவ இடம் சென்றதுதான். நான் சம்பவ ../

இடம் சென்றபோது இரவு 21.30 ஆகும். பிரேதத்தை அந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றபோது சுமார் இரவு 10 மணி இருக்கும். ஆம்புலன்ஸ் வரவழைத்துதான் அங்கிருந்த பிரேதத்தை அனுப்பி வைத்தேனா என்றால் ஆம்புலன்ஸ் வரவைத்துதான் அனுப்பிவைத்தேன். இந்த வழக்கில் சம்பவத்தை தொடர்ந்து எதிரி கொடுத்த புகாரின்பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் விவரம் எனக்கு தெரியும். அதன் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.68/2024 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கையையும் உதவி ஆய்வாளர் திரு.முத்துசாமி என்பவர்தான் பதிவு செய்தார் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு சம்பந்தமான ஆவணங்களை அன்றைய தினம் என் பார்வைக்கு வைத்தாரா என்றால் வைத்தார். அந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்தேன். அந்த வழக்கு பிழையுடைய வழக்கு என்று அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் எதையும் எனது குற்ற இறுதி அறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு விசாரணையின்போது எதிரி துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்ற விவரம் தெரிய வந்ததா என்றால், சிகிச்சைக்கு சென்றுள்ளார் என்ற விவரம் தெரிய வந்தது. எதிரிக்கு மருத்துவமனையில் பதிவு செய்த விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழினை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.எதிரி எந்த தேதியில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் நினைவில் இல்லை. அந்த வழக்கின் கோப்பை பார்த்தால்தான் சொல்ல முடியும். எதிரிக்கு கொடுக்கப்பட்ட காயச்சான்றிதழ் மற்றும் பதிவு செய்த ../

விபத்து பதிவேட்டு அறிக்கை ஆகியவற்றை இந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் அரசு வழக்கிற்கு எதிராக இருப்பதால் அவற்றை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தயாரித்த வரைபடத்தில் கிழமேல் ரோடு நாயுடு தெரு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தென்வடல் சந்து ஆசாரி சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு ரோடுகளும் சிமெண்ட் ரோடு என்றால் சரிதான். இந்த வழக்கு விசாரணையின்போது, இந்த சம்பவம் ஆசாரி சந்தில் வைத்துதான் நடைபெற்றதாக தெரியவந்தது என்றால் சரிதான். என்னுடைய மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி ஓட்டிவந்த இருசக்கர வாகனம் அன்பு பீட்டர் வீட்டிற்கு முன்பு நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பார்த்தபோது, சம்பவ இடத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி வாங்கி வந்ததாக சொல்லப்படும் காய்கறிகள், மள்ளிகைப் பொருட்கள் எதுவும் அங்கு காணப்படவில்லை என்றால் சரிதான். நிறுத்திவைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனம் அருகே ரத்தக்கறை காணப்பட்டது என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்தின் அருகிலிருந்த ரத்தக்கறை படிந்த சிமெண்ட் பகுதியை ஆய்வுக்காக சேகரிக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் கிருஷ்ணமூர்த்தி ஓட்டிவந்த வாகனத்தை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கிடந்ததாக சொல்லப்படும் OPPO Cellphone யாருடையது என்று ../

தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அது எதிரி பயன்படுத்தி வந்த செல்போன்தான். கைப்பற்றியபோது அந்த செல்போன் பயன்பாட்டில் இருந்தது பற்றி தெரிந்துக்கொண்டேனா என்றால் நினைவில் இல்லை. அதை கைப்பற்றிய பிறகாவது அதனுடைய தொலைபேசி எண் என்ன என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. அந்த செல்போன் எதிரியினுடையது என்று கைப்பற்றுதல் மகஜரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரியினுடைய ஒப்புதல் வாக்குமூலத்திலும் அந்த செல்போன் தன்னுடையது என்று அவர் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சான்றுபொருட்களை இரவு 10.15 மணிக்கு கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் கைப்பற்றுதல் மகஜரில் 23.00 மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கலைச்செல்வி, அ.சா.2 சுபநந்தினி ஆகியோர்களை நான் எத்தனை மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால், இரவு 11.30 மணி இருக்கும். அ.சா.1 மூத்த மகனுடன் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால், என்னுடைய விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 சுபநந்தினி என்னுடைய விசாரணையில் சம்பவத்திற்கு பிறகு எதிரி தங்களையும் துரத்தினார் என்றும், பயந்துக்கொண்டு சிறிது தூரம் ஓடிவிட்டோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் அவர் சம்பவத்திற்கு பிறகு எதிரி தன்னுடைய தகப்பனார் பிரேதத்தின் அருகே நின்றுகொண்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 சரண்யா எதிரி தன்னை மிரட்டியதாக என்னுடைய விசாரணையில் ../

சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 இந்த சம்பவம் குறித்து அ.சா.1–க்கு போன் மூலமாகதான் தகவல் சொன்னதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த தொலைபேசி அழைப்புகள் விவரத்தை நான் சேகரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.4 வினோத்குமார், கிருஷ்ணமூர்த்தியின் அக்காவின் மகன் இல்லை என்று சொன்னால், அவ்வாறுதான் தன்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். அ.சா.5 தனீஷ்குமார் மாலை 5.30 அல்லது 6.00 மணி அளவில்தான் வீட்டிற்கு வந்ததாக என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தை சுற்றி வசிப்பதாக சொல்லக்கூடிய ராஜேந்திரன், அன்புபீட்டர், கனீபாய், சுப்புலட்சுமி, துரைராஜ் ஆகிய வீட்டில் வசிப்பவர்கள் யாரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால், நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது, இரவு நேரம் என்பதால் அவர்கள் யாரும் அங்கு இல்லை. மறுநாள் சம்பவ இடம் சென்றபோதும், அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அவர்களை விசாரித்தேன் என்றாலும், அவர்களுடைய வாக்குமூலங்கள் இந்த வழக்கு விசாரணைக்கு எதிராக இருந்ததால் அவற்றை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் மரியதாஸ் என்பவருடைய காலிமனை, அதன் அருகில் இருந்த பாழடைந்த காம்பவுண்ட் சுவர் ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய மாதிரி வரைபடத்தில் நான் சம்பவ இடத்தின் அருகிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்ததை நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்றுபொருட்கள் எதுவும் காணப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவை ../

மறைவான இடத்தில் இருந்ததால் அதை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட முடியவில்லை. சம்பவ இட சாட்சிகள் யாரும் சம்பவத்திற்கு பிறகு எதிரி அங்கே நின்றுகொண்டிருந்ததாகவும் அதை பொதுமக்களில் யாரோ வீடியோ எடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறான வீடியோக்கள் என் கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை என்றால் சரிதான். இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி எதிரியையும், எதிரியினுடைய மாமியாரையும் தாக்கியது சம்பந்தமான குற்ற வழக்கில் தண்டனை பெற்ற அது உயர்நீதிமன்றம் வரை சென்று உறுதியான விவரம் தெரியுமா என்றால் தெரியும். கிருஷ்ணமூர்த்தி தொடர்ச்சியாக எதிரியை கொலை செய்ய முயற்சி செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று எதிரி நடந்துசென்றபோது இருசக்கர வாகனத்தில் வந்த கிருஷ்ணமூர்த்தி எதிரியை அன்புபீட்டர் வீட்டின் முன்பு மறித்து அவர் எடுத்து வந்த அரிவாளால் எதிரியின் தலையில் வெட்டினார் என்றால் சரியல்ல. அன்பு வீட்டிற்கு முன்பாக சிந்தியிருந்த ரத்தம் எதிரியின் ரத்தம் என்பதால்தான் அதை நான் கைப்பறவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன கிருஷ்ணமூர்த்திதான் வண்டியை அங்கேயே நிறுத்திவிட்டு எதிரியை விரட்டிக்கொண்டு ஓடினார் என்றாலும், எதிரி ஆசாரி சந்து வழியாக தப்பி ஓடினார் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி எதிரியை அரிவாளால் தாக்க முயற்சித்தபோது தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து அரிவாளை பறித்து கிருஷ்ணமூர்த்தியை வெட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் அனைத்தும் என்னுடைய விசாரணையில் தெரிய வந்தது ../

என்றாலும், அது எனது வழக்கிற்கு எதிராக இருந்ததால் அவற்றை நான் மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு காரணம் சொல்ல வேண்டும் என்ற காரணத்திற்காக எதிரியை கிருஷ்ணமூர்த்தியின் மகன் கட்டையால் தாக்கியதாக ஒரு வழக்கை பொய்யாக பதிவு செய்தேன் என்றாலும், அதை நானே தவறான வழக்கு என்று முடித்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. நான் வழக்கில் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், அவர் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்தவொரு சான்றுபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எதிரியை அழைத்து வந்து இந்த வழக்கில் குற்றவாளியாக காண்பித்து கைது செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.07.28 18:28:52 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.